(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 61.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2016 மார்ச்சு 24, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

103/ '15

1.

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கனடாவிலும் அமெரிக்காவிலும் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்;

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கனடாவிலும் அமெரிக்காவிலும் முழுமையாக மற்றும் பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில்கள் யாவையென்பதையும்;

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

335/ '15

2.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி – இமதூவ நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் இமதூவ சந்தியை விஸ்தரிப்பதற்காக சுவீகரிக்கப்பட்டுள்ள காணியின் பரப்பளவு எவ்வளவு;

(ii) இமதூவ சந்தியை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் அமைக்கப் படவுள்ள உத்தேச மாற்று வீதியின் நீளம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

337/ '15

3\. கௌரவ நாமல் ராஜபக்ஷ,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 சனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கை போக்குவரத்துச் சபையினுள் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்களின் எண்ணிக்கை யாது;

(ii) அரசியல் பழிவாங்கல்களை சீராக்கும் பொருட்டு, சேவையிலிருந்து நீக்கப்பட்ட குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள், அவர்கள் வகித்த பதவிகளில் மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா;

(iii) நிதி மோசடி, ஒழுக்கத்துக்கு முரணான செயல்கள் உள்ளிட்ட பாரதூரமான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளானவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது, 2015 சனாபதித் தேர்தலின் பின்னர் அரசியல் விதப்புரைகளின் பிரகாரம் அவர்கள் மீண்டும் இலங்கை போக்குவரத்து சபையில் இணைக்கப்பட்டு அல்லது சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார்களா;

(iv) ஆமெனில், இவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

359/ '15

4\. கௌரவ எஸ். எம் மரிக்கார்,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேசிய வருமானத்துக்கு, ஏற்றுமதி வருமானத்தின் மூலம் கிடைக்கும் நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இத் தொகை தேசிய வருமானத்தின் எத்தனை சதவீதமென்பதையும்;

(iii) ஏற்றுமதி வருமானத்தை அதிகரிக்கச் செய்வதற்கான ஏதேனும் இலக்கு உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த இலக்கு யாதென்பதையும்;

(v) மேற்படி இலக்கை அடைவதற்கு எதிர்பார்க்கும் விதமும் கால எல்லையும் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

373/ ' 15

5\. கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கென பாடசாலை சீருடை துணிக் கொள்வனவின் பொருட்டு அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது, எவ்வளவு துணிக் கொள்வனவுக்காக என்பதையும்;

(iii) அதற்கென ஒதுக்கீடு செய்வதற்கு உத்தேசித்துள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி அமைச்சரவைப் பத்திரம் அங்கீகரிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(v) அதன்படி பகிரங்க விலை கோரல் இடம்பெற்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், விலைகளைச் சமர்ப்பித்த வழங்குனர்கள் மற்றும் இவர்களின் விலைகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(vii) கல்வி அமைச்சு, 2016 ஆம் ஆண்டுக்கென சீருடை துணி கொள்வனவு செய்த வழங்குனர்கள் யாவர் என்பதையும்;

(viii) கொள்வனவு செய்யப்பட்ட துணியின் அளவு யாதென்பதையும், அதற்கென செலுத்தப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) துணி கொள்வனவுக்குப் பதிலாக பாடசாலை சீருடை வவுச்சர் ஒன்றை வழங்க முடிவுசெய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) பாடசாலை சீருடை துணியில் 25% முறைகேடாக பயன்படுத்தப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் ஆய்வு அறிக்கையை கல்வி அமைச்சர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

390/ ’15

6.

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சவுதி அரேபிய அபிவிருத்தி நிதியத்தால், அக்கரைப்பற்று, நுரைச்சோலை கிராமத்தில் வீடமைப்புக் கருத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளின் இறுதிக் கட்டத்தின் போது பயனாளிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்க முன்னர் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட 178/2008 ஆம் இலக்க வழக்கின் கட்டளையின் பிரகாரம் வீடுகளை பகிர்ந்தளித்தல் இடைநிறுத்தப்பட்டதென்பதையும்;

(iii) 2009.12.02 ஆம் திகதி வெளியிடப்பட்ட மேற்படி வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டு ஐந்து வருடங்கள் கடந்துள்ள போதிலும், அதற்கமைய வீடுகள் பகிர்ந்தளிக்கப்படாமை காரணமாக மேற்படி ஆதனங்கள் அனைத்தும் மனித பயன்பாட்டுக்கு பொருத்தமற்றவாறு சேதமடைந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேலே அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குத் தீர்ப்புக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தாமதிக்காது அறிவுரை வழங்குவாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

398/ ’15

7.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டின் உண்மையான அல்லது, மதிப்பிடப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(ii) 2016 ஆம் ஆண்டில் எதிர்வுகூறப்பட்ட மொத்த தேசிய உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(iii) வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படுகின்ற பாராம்பரிய முறையின் கீழ், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை வரவு செலவு திட்டத்தில் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் ஒதுக்கப்பட்ட பணத் தொகை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) 2016 வரவு செலவு திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை சமர்ப்பிக்கின்ற நவீன முறையின் கீழ் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத்திட்டத்தில் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் ஒதுக்கப்பட்ட பணத் தொகை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

412/ '16

8.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேயிலையுடன் பெற்றோலியத்தை பண்டமாற்றுச் செய்வதற்காக ஈரானுடன் உடன்படிக்கையொன்றை செய்துகொள்ள முடியாதா என்பதையும்;

(ii) இவ்வாறே, இறப்பர் தொடர்பிலும் இதேபோன்ற பண்டமாற்று சந்தை நிலைமையை ஏற்படுத்திக்கொள்ள முடியுமா என்பதைப் பற்றி ஆராய்ந்துள்ளாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

104/ '15

9.

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் அவுஸ்திரேலியாவிலும் யப்பானிலும் மரணித்த இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின்படி தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் புரிந்த தொழில் யாவையென்பதையும்;

(iii) இந்த ஆட்களின் மரணங்களுக்கான அண்மித்த காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010.01.01 ஆம் திகதி தொடக்கம் 2014.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவிலும் யப்பானிலும் முழுமையாக அல்லது பகுதியளவில் அங்கவீன நிலைமைக்கு உள்ளாகிய இலங்கைப் பிரசைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு நாட்டின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) இவர்களது பெயர், வயது, இலங்கையில் வசித்த முகவரி மற்றும் மேற்படி நாடுகளில் மேற்கொண்ட தொழில் யாவையென்பதையும்;

(iii) இவர்கள் அங்கவீனமடைந்ததற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) இவர்கள் சார்பாக அரசாங்கம் வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

339/ '15

10.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச்செல்லல் தடை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்லல் எவ்விதத்திலும் இடம்பெறுவதில்லையா என்பதையும்;

(iii) மேற்படி மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்லல் தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) GSMB Technical Services (Pvt) Ltd. கம்பனிக்கும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது என்பதையும்;

(ii) மேற்படி கம்பனி அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கம்பனி மேற்கொள்கின்ற வேறு சேவைகள் யாவை என்பதையும்;

(iv) பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்லல் ஆகியவதற்கு இந்தக் கம்பனி தெரிவு செய்யப்பட்டிருப்பது அங்கீகரிக்கப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறைக்கு அமைவாகவா என்பதையும்;

(v) ஆமெனில், அது எத்திகதி முதல் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கம்பனி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் அல்லது புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிபந்தனைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கம்பனியிலிருந்து அரசாங்கத்திற்குக் கிடைத்த குத்தகை வருமானம் யாது என்பதையும்;

(iv) மேற்படி கம்பனிக்கு பொலன்னறுவை மாவட்டத்தில் மணல் அகழ்வு மற்றும் ஏற்றிச் செல்லல் தொடர்பாக தனியுரிமை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதன் மூலம் சுற்றாடல் அழிவு இடம்பெறாதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

360/ '15

11.

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 இல் பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகளை வழங்குவதற்காக கேள்விப் பத்திரம் கோரப்பட்டதா;

(ii) இதற்காக விண்ணப்பித்த கம்பனிகள் யாவை;

(iii) மேற்படி கம்பனிகள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளனவா;

(iv) கம்பனிகள் முன்வைத்த விலைகள் வெவ்வேறாக யாது;

(v) கடந்த வருடங்களில் பல கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட கேள்விப் பத்திரம், இத்தடவை DSI கம்பனிக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதா;

(vi) அதிகூடிய விலைகள் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பத்திரத்தை முன்வைத்தது DSI கம்பனியா;

(vii) DSI கேள்விப்பத்திரத்துக்கான அமைச்சரவை அங்கீகாரம், மிகக் குறைந்த விலையெனக் குறிப்பிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த வருடங்களில் மேற்படி கேள்விப் பத்திரம் பல கம்பனிகளுக்கு வழங்கப்பட்டதா;

(ii) ஆமெனில், ஏன்;

(iii) கடந்த வருடத்தில் DSI கம்பனி பெற்றுக்கொண்ட 04 இலட்சம் சோடி பாதணிகளையும் அக்கம்பனியே வழங்கியிருந்ததா;

(iv) இல்லையெனில், பிறிதொரு நிறுவனத்தினால் 50,000 சோடி பாதணிகள் வழங்கப்பட்டனவா;

(v) இத்தகைய ஒரு நிலைமையில், இக்கேள்விப் பத்திரத்தை தனித்து ஒரு கம்பனிக்கு வழங்கியமைக்கான காரணம் யாது;

(vi) DSI கம்பனிக்கு கேள்விப் பத்திரம் வழங்கப்பட்டமையின் ஊடாக நிதி மோசடி அல்லது அரசாங்கத்துக்கு நட்டம் ஏற்படவில்லையென உறுதிப்படுத்த முடியுமா;

(vii) மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரியவரும் பட்சத்தில், தவறாளிகளைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

374/ '15

12.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அனுராதபுரம், வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் வரை நிர்மாணிப்பதற்கு ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட வடக்கு அதிவேக நெடுஞ்சாலையை, பின்னர் பொலன்னறுவை, திருகோணமலை, முல்லைத்தீவு ஊடாக யாழ்ப்பாணம் வரை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வவுனியா ஊடாக திட்டமிடப்பட்டிருந்த வீதியின் நீளம், எதிர்பார்க்கப்பட்ட மொத்த செலவு மற்றும் காணி சுவீகரிப்பின்போது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை யாவை என்பதையும்;

(ii) பொலன்னறுவை ஊடாக திட்டமிடப்பட்டிருந்த வீதியின் நீளம், எதிர்பார்க்கப்பட்ட மொத்த செலவு மற்றும் காணி சுவீகரிப்பின்போது வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகை யாவை என்பதையும்;

(iii) மேற்படி அதிவேக நெடுஞ்சாலையின் ஒவ்வொரு கட்டத்துக்காக கடன் பெறப்படும் நிறுவனம், கடன் தொகை மற்றும் வட்டி வீதம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) ஆரம்ப திட்டத்தை மாற்றி இவ் வீதியை பொலன்னறுவை- திருகோணமலை ஊடாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) கருத்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

399/ ’15

13.

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு கௌரவ அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்கவின் எண்ணக்கருவின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு தற்போது தங்கள் அமைச்சின் கீழ் காணப்படுகின்ற வரையறுக்கப்பட்ட பொலிப்ரோ லங்கா (தனியார்) கம்பனியினால் 2010 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக பொலிதீன் பயன்படுத்தப்பட்டு பெற்றோல் உற்பத்தி செய்யப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அன்று தொடக்கம் சுமார் ஆறு வருடங்கள் கடந்துள்ள போதிலும் பொலிதீனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற பெற்றோலை சந்தைக்கு விநியோகிக்க முடியாதுள்ளது ஏன் என்பதையும்;

(iii) பொலிதீனைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பெற்றோலை சந்தைக்கு விநியோகிக்க எதிர்பார்க்கின்ற காலப்பகுதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— தகவலுக்கான உரிமை,— தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அணுக்கம் மறுக்கப்படக்கூடிய ஏதுக்களைக் குறித்துரைப்பதற்கும்; தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினைத் தாபிப்பதற்கும்; தகவல் அலுவலர்களின் நியமனத்திற்கும்; தகவலைப் பெறுவதற்கான நடவடிக்கை முறைகளைத் தருவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

## பிரேரணை முன்னறிவித்தல்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2016, ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

3.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“எம்.எஸ். தௌபீக் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

4.

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

“போத்தல – மீபாவல ஸ்ரீ சுதர்ஷனாராம விகாரை கல்வி நிவாரண மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்”

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நுண்நிதியளிப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 3.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

ஆட்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— குற்றவியல் விடயங்களின் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விடயங்களின் போது பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 ஆகஸ்ட் மாதம் 06 ஆம் திகதிய 1926/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2015.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 1954/34 ஆம் இலக்க 2016 பெப்புருவரி மாதம் 18 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 7.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 41 ஆவது பிரின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சினால் ஆக்கப்பட்டு, 2013 சனவரி மாதம் 15 ஆம் திகதிய, 1793/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் கட்டளையின் 13 மற்றும் 17 ஆம் பிரிவுகள் திருத்தப்பட்டு 2015 நவம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1940/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.01.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்கம் கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடும் போது ஊக்கமருந்து பயன்படுத்துவதற்கு எதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டியதும், 34 ஆம் வாசகத்தின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 சனவரி 18 ஆந் திகதிய 1950/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் கட்டளைகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 237 ஆவது பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2015 திசெம்பர் 22 ஆந் திகதிய 1946/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்டதும் 2016.03.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளைகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 10.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ( இல. 1 ) ,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 3ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 11.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ( இல. 2 ) ,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டம் ஆகியவற்றின் மூலம் திருத்தப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் 3ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு 2016 பெப்புருவரி 11 ஆம் திகதிய 1953/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.03.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.